Registered as a Newspaper

A/L 89
பிரிவு: II
ஆரம்பம் 28-03-87
விலங்கியல் – நாகநாதன்
தாவரவியல் – குகாதாசன்
பௌதிகவியல் – வர்ணம்
இரசாயனவியல் – நில்நாதன்
தூய – பிரயோக கணிதம் – திரு. நல்லையா
New Master
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

உதயன்

விலை: ரூ. 1-25

New Master
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.
A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 5-00 மணி

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 16 உ திங்கள்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 29 (30.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 105



நல்லூரில் பொம்மர்கள் நடத்திய தாக்குதலின் போது ஒருசில விநாடிகளில் சின்னபின்னமான வீடு கவிள் இரண்டினை மேலே காணலாம். வீடுகளில் இருந்த பெறுமதிமிக்க பல தளபாடங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. மற்றும் பல தளபாடங்கள் குண்டு விழுந்த அதிர்ச்சியினால் தூக்கி வீசப்பட்டு நொருங்கி உள்ளன. (படம்:- ஜெயம்)



பொம்மர்கள் நல்லூரிலிருந்து குண்டுகள், வீடுகள் மீது விழுந்து வெடித்தபோது ஏற்பட்ட பயங்கர நில அதிர்வில் இந்த வைரவர் கோவில் இருந்து சேதமுற்றது. கூரைப் பகுதியில் ஓடுகளும், சிலரைகளும் உடைந்து நொருங்கியுள்ளன.

குண்டு வீச்சினால் சேதமடைந்த வீடு ஒன்றில் நின்ற புதிய கார் உருமாறி இருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (உ) (படம்:- ஜெயம்)

வீடுகள் பல தரைமட்டம்; உடைமைகள் சேதம்

நல்லூர், நீர்வேலியில் பொம்மர்கள் நாசகாரம்



பொருட்காட்சி ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்ட ரொக்கெட்டின் உந்துபாகம் இது என்று நினைக்கிறீர்கள்

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே தனது நோக்கம் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களை அழித்துவரும் இலங்கை அரசின் நாடகத்தை வெளிப்படுத்தும் நடவடிக்கை பொருள் இது.

ஆம், நல்லூரில் நேற்றுக் காலை பொம்மர்கள் வீசிய கனரகக் குண்டுகளில் ஒன்றையே இங்கு காண்கிறீர்கள்.

அது வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் குறைந்தது இரண்டு வீடுகளாவது தகர்ந்து போயிருக்கும்.

இனப் பிரச்சினை சம்பந்தமான திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்குமுன் இதுபோன்ற நாசகார தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று தமிழர் குழுக்கள் கேட்பதில் என்ன தவறு?

பதுங்கு குழிகளினால் பெருமளவு உயிர்ச்சேதம் தவிர்ப்பு

2 பேர் மட்டுமே பலி; 5 பேருக்குக் காயம்

– கலுவலகச் செய்தியாளர்கள்:- க. இரத்தினராஜசிங்கம், சண். ஜோன்சன் –

யாழ்ப்பாணம், மார்ச் 30

சனிக்கிழமை பகல் யாழ் நகரில் நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான மும்முனைத் தாக்குதலின் தொடர்ச்சியாக நேற்றுக் காலை நான்கு பொம்மர்கள் நல்லூரிலும், நீர்வேலியிலும் பொதுமக்களின் குடிமனைப் பகுதிகள் மீது மிகக் கொடூரமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

கனரகக் குண்டுகள் எனக் கருதப்படும் 55 கிலோ எடையுள்ள குண்டுகளை அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது அக்கிரமமான முறையில் வீசி பொம்மர்கள் நாசகாரம் புரிந்தன.

நீர்வேலியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு அப்பாவிகள் கொல்லப்பட்டனர்.

நல்லூரில் நடைபெற்ற விமானத் தாக்குதலினால் பொதுமக்களின் உடைமைகள் பெருமளவு சேதமுற்றன. பல வீடுகள் விட்டத்தோடு இறங்கி தரைமட்டமாகின. பல வீடுகள் சின்னபின்னமாகிச் சேதமுற்றன. மொத்தத்தில் சுமார் 35 க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

வானத்தில் பொம்மர்கள் வட்டமிட்டு கையோடு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்பாக ஒளித்துக் கொண்டதால் பெருமளவு உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

நேற்றுக் காலை சுமார் 6.20 மணியளவில் நல்லூர்ப் பகுதியை நோக்கி வந்த நான்கு குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்கள் வாழும் குடிமனைகள் மீது பயங்கர குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்கு விமானங்களில் இருந்தும் சுமார் பதினைந்துக்கும் அதிகமான கனரகக் குண்டுகள் குடிமனைப் பகுதிகள் மீது அடுத்தடுத்து வீசப்பட்டன.

இந்தக் குண்டுகள் அனைத்தும் நல்லூர் குருக்கள் தெருவிலும் அதை அண்டிய பகுதிகளிலும் உள்ள பல வீடுகளிலும் வளவுகளிலும் விழுந்து பயங்கரச் சத்தத்துடன் வெடித்தன.

குண்டு வீச்சு விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகளில் இரண்டு கனரகக் குண்டுகள் வெடிக்காத நிலையில் தோண்டி எடுக்கப்பட்டன.

குண்டுத் தாக்குதல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ரூ.50 லக்ஷத்திற்கும் அதிகம் சேதம்

யாழ்ப்பாணம், மார்ச்30

நீர்வேலியிலும் நல்லூரிலும் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களினால் 50 லட்சம் ரூபாவுக்கு மேலான உடைமைகள் நாசப்படுத்தப்பட்டுள்ளன.

மூன்று வீடுகள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன. (உ-10)

சுபநேரம்

30—03—1987
திங்கட்கிழமை

சுபநேரம்:
12-13 முதல் 1-43 வரை
ராகுகாலம்:
7-43 முதல் 9-13 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

விசேட பதிப்பு

முச்சந்தி மூளி

இவி என்ன அச்சாவியார், செத்த அப்பாவி நோயாளிகளை பயங்கரவாதியாக மட்டிமலில் சேர்த்திடுவார் என்று சொல்லுங்கோ!

நல்லூர் தாக்குதலில் சேதமுற்ற வீடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நேற்று நல்லூர்ப் பகுதியில் இரண்டாவது நாளாக ஆகாயப் படையினர் நடத்திய அநியாயத் தாக்குதல்களினால் சேதமடைந்த வீடுகள் சிலவற்றின் விபரம் வருமாறு:-

நல்லூர் குருக்குத் தெருவில் எஸ். அருளம்பலம் என்பவரது வீட்டின் மேல் விழுந்த குண்டுகளினால் வீடு உடைந்து முற்றாகச் சிதறியுள்ளது.

இரண்டு மாடிக்கட்டடங்களைக் கொண்ட இந்த வீட்டினுள் இருந்த தளபாடங்களில் பெருமளவு எரிந்து நாசமாகியுள்ளன.

மாணிக்கம் தர்மரட்ணம் என்பவரது வீட்டின் மேல் குண்டு விழுந்ததன் காரணமாக வீட்டுக் கூரை முற்றாக நாசமாகியுள்ளது.

ஆர். திருநாவுக்கரசு என்பவரது வீட்டுக் கூரையும், செ. துரைசிங்கம் என்பவரது வீடும், அங்கிருந்த வீட்

(4ஆம் பக்கம் பார்க்க)

சைக்கிளில் சென்றவர் பலியானார்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கடந்த சனிக்கிழமை என்று மரணமான வல்லை வெளிப்பகுதியில் சைக்கிளில் சென்றோர் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர் அச்சுவேலியைச் சேர்ந்த எஸ். சக்திவேல் (21 வயது) என்று தெரிவிக்கப்படுகிறது (உ-10)

கோட்டையிலிருந்து வந்த யமன்

ஆஸ்பத்திரி மீது ஷெல்!

9 பேர் உடல் சிதறிப் பலி

நோயாளர் -8; ஊழியர்-1

21 பேர் படுகாயம்; பலர் கவலைக்கிடம்

— க. இரத்தினராஜசிங்கம், எம். பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ் ஆஸ்பத்திரி மீது இன்று திடீரென நடத்தப்பட்ட மிருகத்தனமான ஷெல் தாக்குதல்களினால் எட்டு நோயாளரும் ஓர் ஊழியரும் உடல் சின்னபின்னமாகி உயிரிழந்தனர். தாதி, நோயாளர் உட்பட இருபத்தியொரு பேர் படுகாயமடைந்தனர்.

கோட்டை முகாமிலிருந்து இன்று அதிகாலை முதல் அடுத்தடுத்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளில் இரண்டு காலை 6 மணியளவில் யாழ் ஆஸ்பத்திரியின் மேல்மாடியில் உள்ள 19 ஆம் 20 ஆம் வார்ட்டுகளின் மீது விழுந்து வெடித்துச் சிதறின.

இதனால் ஆஸ்பத்திரி ரணகளமானது.

கட்டிலில் படுத்திருந்த அப்பாவி நோயாளர்கள் பலரின் உடல் சிதறி இரு வார்ட்டுகள் எங்கும் இரத்தமயமாகக் காட்சியளித்தது. உயிரிழந்த நோயாளர்களின் மூளை, சதைத் துண்டங்கள் ஆங்காங்கே வீசப்பட்டுக் கிடந்தன.

அப்பாவி நோயாளர்களை எடுப்பே என்ன நடந்தது என்பதை உணருவதற்கு முன்னரே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றனர்-

ஒருசில விநாடிகளில் சின்னபின்னமான இந்த இரு வார்ட்டுகளும் இனி மேல் பாவிக்கமுடியாத நிலையில் சேதமுற்றன.

ஷெல்களினால் படுகாயமடைந்த நோயாளர்கள் வேறு வார்ட்டுகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

மணிக்கூடுகளும் செயலிழந்தன

யாழ்ப்பாணம் மார்ச் 30

யாழ் ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல் இன்று காலை நடத்தப்பட்ட போது நேரம் 6 25

19, 20 ஆம் வார்ட்டுகளில் இருந்த இரு மணிக்கூடுகள் ஷெல் அதிர்ச்சியினால் அப்படியே நின்றுபோயுள்ளன. அந்த மணிக்கூடுகள் இரண்டும் காட்டிக்கொண்டிருக்கும் நேரம்தான் இது. (உ)

படுகாயமடைந்த நோயாளர், ஊழியர்

யாழ்ப்பாணம், மார்ச்30

இன்று காலை யாழ் கோட்டை முகாமில் இருந்து ஆஸ்பத்திரி மீது மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான ஷெல் தாக்குதலினால் காயம் அடைந்தவர்கள் வருமாறு:

1. திருமதி எஸ். பரமசோதி (39 வயது) யாழ் ஆஸ்பத்திரி தாதி. அண்மையில் திருமணமானவர்.
2. ஆண் (14 வயது) சாவகச்சேரி.
3. ஜோசப் சிக்வெஸ்டர் (12 வயது) ஜெயபுரம், பல்லவராயன் கட்டு வாசி.
4. எஸ். கணேசன் (4ஆம் பக்கம் பார்க்க)

மரணமானோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஆஸ்பத்திரியில் உயிரிழந்த ஒன்பது பேரின் பெயர்விவரம்வருமாறு:-

1. எஸ். நவரட்ணம் (57) ராசாவின் தோட்டம்.
2. ஜேசுதாசன் (37)
3. மோகனகுமார் (22) திருநகர் கிளிநொச்சி.
4. ந. விசுவலிங்கம் (47) புங்குடுதீவு.
5. பொன்னம் பலம் (64) கல்லுண்டாய்
6. இராசநாயகம் (18)
7. பரமசுந்தரம் (53) நல்லூர்
8. செந்திவேல் (நெல்லியடி)
9. தர்மபாலன் (ஆஸ்பத்திரி சிற்றூழியர்.

அவசர அவசரமாக நோயாளர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச்30

யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலையடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்கள் எவ்வித அறிவித்தலுமின்றி ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இன்று காலை முதல் பெரும் எண்ணிக்கையான நோயாளர்களும் நோயையும் பொருட்படுத்தாது ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி, அப்பட்டவானத்தில் ஏறி நகருக்கு நகர்ப்புறமான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

நடக்கமுடியாத நோயாளர்களை கூட அவசர அவசரமாக வீதிகளில் இழுபறிப்பட்டு ஆஸ்பத்திரியையும், நகரையும் விட்டு ஓடித்தப்ப முயன்றனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
சின்னஞ் சிறு விளம்பரங்கள்
★★★★★★★★★

விரைவினைக்கு

3 பரப்புக்காணி சண்டிவிப்பாய் சந்தியிலிருந்து மாவிப்பாய் வீதியில் நல்ல சுற்றுடலில் உண்டு. ந. [illegible]ஜெயராஞ்சிதன், 207, பலாலி வீதி, வாழ்ப்பாணம். (2819)

வேலைவாய்ப்பு

ஸ்ருடியோ தொழில் பழகிய – பழக விரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும், ஸ்ருடியோ – நித்திய சித்திரா, பிரதான வீதி, சங்கானை. (1162)

அடகு நகைகளை மீளளிக்க மட்டக்களப்பில் நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு – ஆம்பாறை மாவட்டங்களில் உள்ள மக்கள் வங்கிகளில் அடகு வைத்தவர்களின் நகைகளை திருப்பி ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

அடகு நகைகளை மீளப் பெற பணம் செலுத்திய சுமார் 4 ஆயிரம் பேர் இதுவரை நகைகளைப் பெற்றனர்

இந்நகைகள் இம்மாவட்டங்களில் வைத்தே வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து அண்மையில் மட்டக்களப்பு கச்சேரிமுன் மறியல் போராட்டம் நடைபெற்றது

வங்கி நிர்வாகம் கொழும்பில் உள்ள தனது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து பொலீஸ் நிலையங்களுக்கு அருகிலுள்ள வங்கி கிளைகளில் வைத்து அடகு நகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதல் வாரம் வங்கி அதிகாரிகள் கொழும்பு சென்று விமானத்தில் நகைகளை எடுத்து வர இருக்கிறார்கள்

அதுவரை பணம் செலுத்தாதவர்களும் பணம் செலுத்தினால் நகைகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

கச்சேரி மறியல் போராட்டம் வெற்றி

போதனைகளோடு சாதனைகளும் தேவை

சுவாமி சித்ருபானந்தா உரை

மாவிப்பாய், மார்ச்30

இன்றைய இக்கட்டான நிலையில் நாம் போதனைகளுடன் நின்று விடக்கூடாது. பல சாதனைகள் நிறைவேற்ற வேண்டும்.

வெளிச்சவீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் உள்ளத்தூய்மையுடன் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தித் சேவையாற்றும் பணியிலேயே அதிக கவனத்தைச்செலுத்தவேண்டும்.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ருபானந்தா இவ்வாறு கூறினார்.

உடுவில் இராமநாதன் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

கல்லூரி அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் சுவாமியை வரவேற்று அறிமுகம் செய்துவைத்தார்.

சுவாமி சித்ருபானந்தா மேலும் கூறியதாவது:

மதங்கள் யாவும் ஒரு உண்மைப் பொருளை நாடிச் செல்லும் பலவழிகளே.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் சோதனைகளற்ற முற்றுத்தலை அறிவுறுத்தும் அவதாரங்களாகும்.

மாணவர்கள் புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாமல் ஆத்மீக கல்வியிலும் கவனம் செலுத்தவேண்டும். ஆத்மீக சக்தியைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் —இப்படி அவர் கூறினார்

ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றியிட்டிய செல்வி இ. வசந்தராணி, செல்வி இ. ரஞ்சினி, செல்வி ஸ்ரீசாந்தினி செல்வி இ. ஜெயலட்சுமி ஆகியோருக்கு சுவாமி சித்ருபானந்தா பரிசுகளை வழங்கினார். (உ-90)

முதலாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச்30

காரைநகர் களபூமி காளிகோவிலடி வளர்மதி சனசமூக நிலையத்தினர் இன்று திங்கட்கிழமை முதலாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர்

செல்வன் பத்மநாதன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

சிறுவர் நிகழ்ச்சிகள், விநாடிவினா, நாடகம் ஆகியவை விழாவில் இடம் பெறுகின்றன. (இ)

வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சை

யாழ்ப்பாணம் மார்ச் 30

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் முதலாம் ஆண்டு முதல் ஆறும் ஆண்டுவரையான செயல்முறைப் பரீட்சைகள் ஏப்பிரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

மே 3 ஆம் திகதிவரை நடைபெறும் இப் பரீட்சை யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, தெல்லிப்பளை, மாவிப்பாய், கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெறும்.

அறிமுகப் பரீட்சைகள் மே மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறும். (இ-ஊ)

இலங்கை திரும்பும் அகதிகள் குறித்து சிறிமா எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 30

இலங்கை திரும்பும் தமிழ் அகதிகள் குறித்தநாம் கவனமாக இருக்கவேண்டும் யாழ்ப்பாணம் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இச்சமயத்தில் இவர்கள் திரும்பி வருகின்றார்கள். இவர்கள் யுத்தப் பயிற்சி பெற்றவர்களாக இருக்கலாம்.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, கொழும்பு ஆகில நாமிழம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்னாள்வாறு தெரிவித்தார்

திரு ஜெயவர்த்தனவுக்கும் திரு ராஜீவ் காந்திக்கும் இடையே நடைபெற்ற சுடிதப் போக்குவரத்துக்கு, இந்தியத் தூதர் திரு டிக்சிற் எங்களுக் சந்தித்துத் தெரிவித்த கருத்துக்கள் ஆயெயற்றை நான் பரிசீலித்துப் பார்த்தேன்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை அப்போது நான் உணர்ந்தேன்.

அதன் பின்னர்தான் நான் பிரதமர் காந்திக்குத் தந்தி ஒன்றை அனுப்பினேன்

"இன்றைய இலங்கை நிலைக்குக் காரணம் ஜனாதிபதி ஜெயவர்த்தனு, பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரின் நடவடிக்கைகளே!"

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (இ – எ)

சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச்30

நவீனதீவு செம்மணித் தம்புலப் ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கணேசா சனசமூக நிலைய சமய கலாசார பகுதி வருடந்தோறும் நடத்திவரும் சமய அறிவுப் போட்டிப் பரீட்சை இம்முறை நவீனதீவு பாடசாலைக் ரீதியாக ஆண்டு நான்கு முதல் ஆண்டு பதினொன்று வரையில் நடைபெறும்.

பொது ரீதியாக மற்றொரு போட்டிப் பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சையில் கலந்து கொள்ள விரும்புவர்கள் கணேசா சனசமூக நிலையத்துடன் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் யாவும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியும்— பரிசளிப்பு 15 ஆம் திகதி மாலை பூங்காவனத் திருவிழாவன்றும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

காவலூரில் கலாசார அவை

ஊர்காவற்றுறை, மார்ச்30

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கலாசார அவை ஒன்றை ஏற்படுத்த ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் முயற்சி எடுத்து வருகின்றார்.

இப்பகுதியில் உள்ள கவி, இலக்கிய ஆர்வலர்களையும், ஓவியம் நடனம் சங்கீதம் ஆகியவற்றில் ஈடுபாடு உள்ளவர்களையும் ஒன்று சேர்த்து இவ் அமைப்பு உருவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது (உ-16)

தங்கப்பதக்கம் பரிசில்

வட்டுக்கோட்டை, மார்ச்30

யாழ் சைவ பரிபாலன சபையினரால் ஆதி இலங்கை ரீதியில் இவ்வாண்டு நடத்தப்பட்ட விருக்கும் சைவசமய பாடப் பரீட்சையில் 7 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையுள்ள மாணவர்களுக்கு முதற்பரிசாக தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பரீட்சை நவம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஆண்டு 3 முதல் ஆண்டு 13 வரை நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தினம் ஜூன் மாதம் 31 ஆம் திகதி என பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் திரு வ. கந்தசாமி அறிவித்திருக்கிறார். (உ-161)

காப்புறுதிப் பணம் கிடைக்கும்

சவூதியில் வேலை செய்த வெளிநாட்டவருக்கு அதிர்ஷ்டம்!

கொழும்பு, மார்ச் 30

சவூதி அரேபியாவில் வேலை செய்த வெளிநாட்டவர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

ஆனால் அந்த அதிர்ஷ்டத்தை எப்போது அனுபவிக்கலாம் என்பது தான் தெரியவில்லை

அதிர்ஷ்டம் எப்படி அமையும் என்பதன் விவரம் வருமாறு:

சவூதி அரேபியாவில் வேலை செய்பவர்களின் மாதச் சம்பளத்தில் சமூகக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 5 சத வீதம் மாதாந்தம் கழிக்கப்பட்டு வந்தது.

இப்படிக் கழிக்கப்படும் பணத்தை அந்த ஊழியர் 59 வயதை அடைந்ததும் பெற்றுக்கொள்ள முடியும்

இப்போது அந்த சமூகக் காப்புறுதித் திட்டத்தை சவூதி அரேபிய அரசாங்கம் செய்துவிட்டதாகத் செய்வதற்கான உத்தரவை சவூதி மன்னர் பஹ்த் அண்மையில் பிறப்பித்தார்

இதனால் இத்திட்டத்தின்கீழ் கழிக்கப்பட்ட பணம் மொத்தமாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் திருப்பி வழங்கப்படும்.

சவூதியிலே வேலை செய்து விட்டு திரும்பிய வெளிநாட்டவர்களும் இப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும்.

திரும்பிய வெளிநாட்டவர்கள் தங்களுடன் கொண்டுவந்த 'GOSI'' அட்டையைப் பத்திரமாக வைத்துக் கொண்டால் கழிக்கப்பட்ட காப்புறுதிப் பணத்தைப்பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

மேலும் தகவல்களை 'Governor General of General Organisation for Social Insurance, Post Box 2963, Riyadh 11461''— என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (உ-ஏ)

யாழ் இந்து பரிசுத்தினம்

யாழ்ப்பாணம், மார்ச்30

கடந்த 12 ஆம் திகதி நடைபெறவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை (2 ஆம் திகதி) பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

அரசாங்க அதிபரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. வை. மு. கஞ்சனிக்கம் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். (உ)

நாடசாலைகளில் இசை, நடன, நாடக மேம்பாட்டுக்குக் கழகம்

வட்டுக்கோட்டை, மார்ச்30

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இசை, நடன, நாடகத் துறைகளின் தரத்தை உயர்த்து முகமாக சகல பாடசாலைகளினதும் இசை, நடன, நாடகத் தரமேம்பாட்டுக்கழகங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார்.

இக் கற்றறிக்கைக் கிணங்க பாடசாலைகள் தோறும் ஆரம்பிக்கப்படவுள்ள இசை, நடன, நாடகத் தர மேம்பாட்டுக் கழகங்களின் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு ஆசிரியர் நியமிக்கப்படுவார்.

இந்த ஆசிரியர்களின் விவரங்கள் வட்டார ரீதியில் சேரிக்கப்பட்டு இம்மாதம் முதல் வட்டார ரீதியில் இசை நடன, நாடகத் துறைகளில் தர மேம்பாட்டுக் கருத்தரங்குகள், செயல் மரவுகள், களப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திணைக்கள மட்டத்தில் இசைத் துறைக்கு சங்கீதக் கல்வி அதிகாரி திரு சு. கணபதிப்பிள்ளையும் நடனத் துறைக்கு திரு. வேலுஆனந்தன், நடன ஆசிரிய திருமதி எஸ் செல்வராசா ஆகியோரும் நாடகத்துறைக்கு யாழ்ப்பாணம் கல்வி அதிகாரி திரு தி. சிவானந்தனும் நெறியாளர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். (இ-161)

சமூகவியல், மொழியியல் ஆராய்ச்சிக்கு உதவும் நாவல்கள்

"கானல்" அறிமுக விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ் ஆக்க இலக்கியம் இலக்கியம் சமூக அறிவியல் துறைகளுக்கு நல்ல பங்களிப்பைச் செலுத்துகின்றது. டானியலின் நாவல்கள் இன்று சமூகவியல், மொழியியல் போன்ற பல துறை ஆராய்ச்சிகளுக்கு உறுதுணையாக உள்ளன."

எழுத்தாளர் டானியலின் ஒரண்டு நினைவு தினம் யாழ் கலாசார மண்டபத்தில் திரு சு மார்க் தலைமையில் நடைபெற்றது

அப்பொழுது 'கானல்' என்ற டானியலின் நாவல் அறிமுக உரை நிகழ்த்திய பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"அவருடைய ஏனைய நாவல்களுக்கு எதிராகப் பெரும்பாலும் கூறப்படும் இலக்கியப் பழிவாங்கல் இந்த நாவலில் இல்லை

தமிழகத்தில் வெளிவந்த சஞ்சிகை ஒன்றுக்கு டானியல் எழுதிய கதையே இன்று 'கானல்' நாவலாக விரிந்து மலர்ந்துள்ளது

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதால்விமோசனம் அடைவதாகவே என்பது ஒரு மாயை என்ற கருத்தில் உருவான இந்த நாவலுக்குக் 'கானல்' என்று பெயரிட்டது பொருத்தமாகும்.

—இவ்வாறு பேராசிரியர் சண்முகதாஸ் கருத்து வெளியிட்டார்.

நாழ் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ். வெலிங்டன் ராசா, திரு சி இந்தரன் மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். (இ-9)

ஊர்காவல் படைக்கு இராணுவப் பயிற்சி

கொழும்பு, மார்ச் 30

சுமார் 20 ஆயிரம் ஊர்காவல்படையினர் இன்று பணிபுரிகின்றனர் அவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது.

இதனிடையில் இரண்டாவது ஊர்காவல்படை பயிற்சி நிலையம் அனுராதபுரத்தில் விரைவில் செயல்படவுள்ளது.

பிரதி உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் திரு அனுரா பண்டியன் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

ஹொரணையில் கும்புக்க ஊர்காவல்படைப் பயிற்சிநிலையத்தில் பயிற்சி முடிந்த வெளியேறிய 149 ஊர்காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் வைபவத்தில் பிரதி அமைச்சர் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது இத்தகவல்களை அவர் வெளியிட்டார்.

தீவிரவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதுதான் அரசின் எண்ணம். இருப்பினும் அப்பாவிகள் படுகொலைகளுள்ளாவதை அரசு பார்த்துக்கொண்டிருக்காது

அரந்தலாவையில் பிக்குகளைக் கொல்லப்பட்ட பின்னர் ஊர்காவல்படையினருக்கு இராணுவப் பயிற்சி வழங்க அரசு தீர்மானித்துள்ளது

அனுராதபுரம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் ஊர்காவல் படையினர் [illegible] சேவையாற்றுகின்றனர்.

இப்படி பிரதி அமைச்சர் சொன்னார். (உ-எ)

கலட்டிப்புலம் ஞானவைரவர் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம், மார்ச்30

ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் 36 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: ந. தியாகராஜா உபதலைவர்: ந. சண்முகநாதன் செயலாளர்: து. கமலநாதன் உபசெயலாளர்: ச. தவசீலன் பொருளாளர்: வ. க. கிள்ளத்துரை

செயலவை: ந. சிவபாதசுந்தரம், கு. இராசரத்னம், மனக்குப் வரி சோதனையர்: க. சபாநாதன் (இ-ஏ)

தீவுப்பகுதியில் கடும் வரட்சி

ஊர்காவற்றுறை மார்ச் 30

மாரி மழை அதிக மாகப் பெய்யும் காலங்களிலேயே வரட்சியாக கஷ்டப்படும் தீவுப்பகுதி இம்முறை அதிகளவு வரட்சியாகப் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது

இப்பகுதியில் உள்ள சிறு குழிகளில் மழைநீர் யாகத் தேங்கிக் கிடக்கும் நீர் கூட இம்முறை முற்றாக வற்றியுள்ளதாக மக்கள் அச்சத்துடன் வரட்சியை எதிர்பார்த்திருக்கின்றனர்.

புங்குடுதீவுப் பகுதியில் சில கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்கனவே ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் தற்போது அருந்தும் நீர் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கலாம் எனத் கட்டுக்காட்டியுள்ளனர் இயக்க மொன்று இவர்களுக்கான குடிதண்ணீரைச் சாட்டி கிராமத்திலிருந்து பெற்றுக் கொடுக்க முயற்சி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சமூக சேவைத் திணைக்களத்தினூடாக குடி தண்ணீர் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-16)

அகதிகளுக்கு உதவக் கோரிக்கை

கல்லுண்டாய், மார்ச் 30

'அகதிகளாக வந்துள்ள தமிழ் மக்களை நாம் எது மண்ணில் சரியாக அநுசரிக்கத் தவறினால் எதிர்காலச் சந்ததியின் சாபத்துக்கு ஆளாக நேரிடும்'.

இவ்வாறுகந்தரோடை கிராம சேவகர் திரு. வேலும்மயிலும் குறிப்பிட்டார்.

திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய மாகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்து கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தஞ்சம் புகுந்திருக்கும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம் சீருடை வழங்கியது

இவ்வைபவத்திற்கு திரு. வேலும் மயிலும் தலைமை வகித்தார்

கழகத்தலைவர் திரு முகிலன்துரை பொருளாளர் திரு. திருநாவுக்கரசு ஆகியோர் சீருடைகளை வழங்கினர். (உ-27)

மக்கள் முகம்

90 ஆவது நாள் நினைவஞ்சலி

மறைவு: 30.12.1986

திருமதி
கலாதேவி சிவபாதம்

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் வினையில் எம்மையெல்லாம் அருத்துயரில் விட்டுச் சென்றனையோ! தங்கள் திருவுருவை எங்கே காண்போம் என்று ஏங்கும் எம்மை.

தகவல் பிரியாவிடை வாடும்
கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், அண்ணன்,
அக்காமார், தம்பிமார்,
தங்கைமார், மச்சாள்,
மச்சான்மார்,
மருமக்கள், பெருமக்கள்
மற்றும்
உற்றார் உறவினர்கள்.

பிள்ளையார் வீதி,
மயிலிட்டி. (1154)

முதலாண்டு நினைவஞ்சலி

அமரர் பொ. முத்தையா
(கள்ளிக்குளம்)

மலர்வு: 04-07-1920 உதிர்வு: 10.04.1986

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!

தாங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு பூர்த்தியாகின்ற இவ்வேளையில் தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பகவானை வேண்டுகின்றோம்.

கள்ளிக்குளம், மாமடு, வவுனியா. (1164)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

முரமலர்ச்சி செலவில்லாத கொடை யாகும். முரமலர்ச்சியை எல்லாரும் ஏற்றுக் கொள்வர் எந்த ஏழையும் முகமலர்ச்சியை வழங்கலாம்.

— தர்மசக்கரம்

உதயன்

இல.15,நீராவியடி முதலியார் தொலைபேசி:24805
மிக்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 30-03-1987 த.பெ இல. 38

மனப் பதற்றம் அகல நெஞ்சுறுதி கொள்ளுங்கள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாதர் ஒரு மாதத்திற்கு முன்னர் அதே ஆலயத்தின்மீது ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இம்முறை யாழி இராணுவ முகாமில் இருந்து ஆலயத்தின் மீது குறிபார்த்துச் ஷெல்கள் வீசப்பட்டிருக்கின்றன. ஒருநடவை இரண்டுநடவை அல்ல. பதினொரு முறைகள் ஆலயத்துக்குச் ஷெல் அடிக்கப்பட்டது.

ஆலயத்தில் பல எறிகளும் பலத்த சேதம் அடைந்துவிட்டன. அதனால் நித்திய பூசைகள் நடத்த முடியாது என்று ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமான மகா ராஜஸ்ரீ து. ஷண்முகநாதக்குருக்கள் கவலையோடு அறிவித்திருக்கிறார்.

கோயிலுக்குப் பாதுகாப்புத் தேடிச் சென்றவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். ஆலய வீதிகளில் குடியிருந்த அர்ச்சகர்கள் வீடுகளும் சேதமடைந்தன, அர்ச்சகர்களும் காயமுற்றுள்ளார்கள்.

செல்வச்சந்நிதி, நயினாதீவு ஆலயங்களின் வரிசையில் இப்போது மாவிட்டபுரத்தையும் சேர்த்திருக்கிறார்கள் அரசாங்கப் படையினர்.

ஆலயங்கள் புனித ஸ்தலங்கள். மக்கள் மன நம்பிக்கையோடு இறைவனை இறைஞ்சும் ஸ்தலங்கள். அவை இறைவனின் இல்லங்கள். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் ஆலயங்களுக்கு தனி மதிப்பும் மரியாதையும் எழுந்து வது உண்டு. யுத்த காலங்களில்கூட ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவை தாக்கப் படாமல் தவிர்க்கப்படுவது உண்டு.

தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுக் காயமடைவோர், உயிருக்குப் போராடுபவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்வதுபோல, அகதிகள் ஆலயங்களில், ஆலய மடங்களில் தஞ்சம் அடைவர்.

ஆனால் ஸ்ரீலங்கா அரச படைகள் நடத்தும் போரில் ஆலயங்கள், ஆஸ்பத்திரிகளுக்குக்கூட விதிவிலக்கில்லை. ஸ்ரீலங்கா அரசு நடத்துவது சாதாரண போரல்ல ஓர் இனத்தை ஒழித்துக்கட்டும் போர். அதனாலேயே மக்கள் வாழும் வீடுகள், ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள் என்று விச்சாரம் இல்லாமல் எல்லாம் அழிக்கப்படுகின்றன.

தெற்கில் வீடுகள் கட்டப்படுகின்றன; புதிது புதிதாக அரசாங்கமே வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. ஆனால் வடக்கு, கிழக்கில் மக்கள் பாடுபட்டுத் தேடிக் கட்டிய வீடுகள் தகர்க்கப்படுகின்றன.

தெற்கில் விகாரைகள் கட்டப்படுகின்றன; புனரமைக்கப்படுகின்றன. அரசாங்க நிதி உதவியும் வழங்கப்படுகின்றது. ஆனால் தமிழர் பிரதேசங்களில் ஆலயங்கள் அழிக்கப் படுகின்றன மற்றும் பண்பாட்டு நிலையங்கள் தரைமட்டமாக்கப்படுகின்றன.

தெற்கில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. சரித்திரத்தைப் புனரமைக்கத் 'தடயங்கள்' வெளியே எடுக்கப்படுகின்றன. அரசு தனது சொந்தச் செலவில் ஆயிரப் பேணிப் பாதுகாக்கிறது ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் ஆலயங்கள் மற்றும் பண்பாட்டு வரலாறுகள் சின்னங்களை அழித்து அவற்றை நிலத்தோடு புதைத்துவிட நாக்குகள் நடத்தப்படுகின்றன சைவ துறைகளிலும் அங்கே ஆக்கவேலை: இங்கு அழிப்பு வேலை.

தாக்குதல் நேரங்களில் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் பாதுகாப்புத் தேடுங்கள் என்று ஹெலி மூலம் விசிய துண்டுப்பிரசுரத்தில் கேட்டார்கள். இப்போது ஆலயத்தைக் குறிவைத்துத் ஷெல் தாக்குதலும், ஹெலித் தாக்குதலும் நடத்துகிறார்கள்.

பாதுகாப்புக் கருதி மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஆலயங்கள், தேவாலயங்களில் கூடும்போது, ஒரே முறையில் பலரைக் கொன்றழிப்பதான சதியே அந்த வேண்டுகோளின் உள்நோக்கம் என்பது இப்போது புரிகிறதல்லவா?

தமிழ் மக்களைத் தம் பக்கம் இழுத்து இடைத்தேர்தல் வைக்கப் போவதாக வாய்ப் பந்தல் போட்டுக் கொண்டே அரசாங்கம் தமிழ் மக்களை, அவர்களது உடைமைகளை, அவர்களது பண்பாட்டு வரலாற்று நிலையங்களை, அவர்களது பூமியை நாசம் செய்து வருகிறது; துவம்சம் செய்கிறது.

நாளாந்தம்— காலை, மாலை, இரவு என்று— சதா ஹெலித் தாக்குதலும், ஷெல் தாக்குதலும், விமானத் தாக்குதலும் பெருகி வருகின்ற தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை மனப்பதற்றம் விரவியதாகி விட்டது.

அதற்கு என்ன செய்யலாம்?

நடக்கும் சம்பவங்களுக்கு எம்மைப் பழக்கிக் கொண்டு, நெஞ்சில் பயத்துக்கு இடம் கொடாமல் துணிவுடன் மன உறுதியுடன் இருப்பதே ஒரே மார்க்கம்.

காலம் வரும்போது எதிரியை எதிர்த்து நிற்கக்கூடிய மனத்துணிவை இப்போதிருந்தே வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் ஒவ்வொருவரும் போராளிகளாக மாற வேண்டிய ஒரு கட்டத்துக்கு அரசாங்கம் அத்திவாரம் போடுகிறது. அதனை உணர்ந்து நெஞ்சில் உறுதியை வளர்த்து, எம்மைப் பாதுகாக்கத் தயாராகுவோமாக. எது நடக்குமோ அது நடந்தே ஆகும் காலம் போது சோதனைகளைச் சாதாரண மன உறுதி கொண்டவர்களாகச் சாக நினையுங்கள்!

ஈரானிய விமானங்கள் ஆப்கானில் ஊடுருவல்

காபூல், மார்ச் 29

ஆப்கானிஸ்தான்-ஈரான் எல்லைப் பகுதிகளில் ஈரான் விமானங்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் பிரதிநிதி திலுள் ஈரான் யுத்த விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்து வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டது இருநாட்டு உறவுகளையும் பாதிக்கும் என ஆப்கான் தலைவர் நஜிபுல்லா தெரிவித்தார்.

ஆப்கான் எல்லைப் பகுதியில் மூன்று வெவ்வேறு இடங்களில் ஈரானிய போர் விமானங்கள் ஏழு ஊடுருவின, அவை ஆப்கான் எல்லைக்குள் வந்து விட்டதாக அவற்றிற்குத் தெரிவிக்கப்பட்டபோதும் அதனைச்சட்டை செய்யவில்லை இதனால் அநாவசியமான பதற்ற நிலைமையை ஆப்கான் வாசிகளிடம் அவை உருவாக்கின

இவற்றின் இந்த ஊடுருவல் வேவு நடவடிக்கையாக இருக்கலாம் என ஆப்கான் எதிர்பார்ப்பதால் அடுத்தமுறை ஊடுருவும் எந்தவிமானமானாலும் ஈரானிய விமானத்தையும் சுட்டு வீழ்த்தும்படி பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நஜிபுல்லா மேலும் தெரிவித்தார். (ஒ)

வேவு நடவடிக்கை என்கிறார் நஜிபுல்லா

கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

ஒஸ்லோ மார்ச் 29

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்க்கும் வகையில் 'ஸ்கண்டிநேவியா' நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடையை தீவிரமாக அமுல்படுத்த வேண்டும்.

கனேடா, நோர்வே, பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் நேற்று ஐஸ்லாந்தில் இக்கருத்தை வலியுறுத்தினர்.

தென் ஆபிரிக்காவின் வர்த்தக உறவுகளை முற்றாகத் துண்டிக்க வேண்டும். அத்துடன் இனவெறி தென் ஆபிரிக்கா அரசை எதிர்த்துப் போராடும் முன்னணிநாடு நாடுகளுக்கு தீவிரமாக ஆதரவு வழங்கவேண்டும்

இவ்வாறு மேலும் அங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது

தொழில் அதிபர்கள் ரஷ்யாவில் நாட்டம்

மாஸ்கோ, மார்ச்29

ரஷ்யாவில் கூட்டுத் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வெளிநாட்டுத் தொழில் அதிபர்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ரஷ்ய அதிகாரிகள் தெரிவிக்கும் தகவல்களின்படி மேற்கு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் ஏற்கனவே முப்பது பூர்வாங்க உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன

வெளி நாட்டுத் தொழில் அதிபர்கள் ரஷ்யாவில்கைத்தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புகின்ற பேரதிலும் இறுதி ஒப்பந்தங்களை செய்து கொள்வதில் மிகுந்த ஆவலாகவுமாக இருக்கிறார்கள் எதிர் காலத்தில் இத்தகைய கூட்டு முயற்சிகளுக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகள் குறித்து அவர்கள் இன்னமும் சந்தேகத்துடனேயே இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது

ரஷ்யா கடந்த வருடம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. (ஒ)

வெளி உலகில்

இஸ்ரவேல்-சீன உறவு

தெல்அவிவ் மார்ச் 29

சீனாவுடன் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள இஸ்ரவேல் முயற்சி செய்துவருகின்றது

இவ்வாறு இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார். (ஒ)

அமெரிக்காவில் அடைக்கலம்

ஆடிஸ்அபாபா, மார்ச்29

ஜப்பானில் எதியோப்பியாவின் தூதுவராக இருந்த அபேதி மேடா சில காலம் தலைமறைவாக இருந்தபின்னர் அமெரிக்க அரசாங்கம் அடைக்கலம் அளித்திருப்பதாக அறிவித்துள்ளது.

எதியோப்பியாவின் தற்போதைய அரசாங்கம் கடைப்பிடித்துவரும் தவறான கொள்கைகளாலும் அடக்குமுறை நடவடிக்கைகளினாலும் அங்கு பெரும் குழப்பங்கள் உருவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஒ)

தங்கச்சுரங்க விபத்து

எக்குவடோரில் உள்ள தங்கச்சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 87 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

நாகஸோனி அமெ. விஜயம்

அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்குமிடையே வர்த்தகத் துறையில் ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்த்து வைக்க ஜப்பானிய பிரதமர் நாக ஸோனி அடுத்தவாரம் அமெரிக்கா செல்வார்.

ரஷ்யாவிடமிருந்து

அதிநவீன கம்பியூட்டர் இந்தியாவிற்குக் கிடைக்கும்

மாஸ்கோ, மார்ச் 29

எல்லைத் நிபந்தனைகளுமின்றி ரஷ்யா அதிநவீன கம்பியூட்டர் சாதனம் ஒன்றை இந்தியாவிற்கு வழங்க முன்வந்துள்ளது

இந்தியா கேட்டிருந்த அதிநவீன கம்பியூட்டர் ஒன்றைக் கொடுக்க அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளதென்றும் தாரதில் ஒரளவு குறைந்தமற்றுமொருகம்பியூட்டரை வழங்க அமெரிக்கா சம்மதித்தது என்றும் செய்திகள் வெளியான பின்னரே ரஷ்யா இவ்வாறு அறிவித்தது.

ஒரு விநாடியில் பத்து லட்சம் கணிப்புகளை இந்த நவீன கம்பியூட்டர் மேற்கொள்ளும் என்றும் ரஷ்யா மேலும் தெரிவித்தது.

1985 ஆம் ஆண்டு றேகனும் ராஜீவும் மேற்கொண்ட ஒப்பந்தம் ஒன்றின் படி அமெரிக்கா நவீன கம்பியூட்டரை இந்தியாவிற்கு வழங்க முன்வந்திருந்தது (ஒ)

அமெ. படைத்தளங்களை மூட கிறீஸ் கோரிக்கை

ஏதென்ஸ், மார்ச் 29

கிரேக்கத்திற்கும் துருக்கிக்கும் இடையே ஏற்பட்டுள்ளநெருக்கடிநிலையைத் தொடர்ந்து கிரேக்கத்தில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்களை தற்காலிகமாக மூடிவிடும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

கிரேக்க பிரதமமந்திரி அந்திரியா பப்பந்திரியோ இன்று அமெரிக்காவிற்கு விடுத்த வேண்டுகோளில் இவ்வாறு கேட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய ஏஜியன் கடற்பிராந்தியத்திற்கு துருக்கியின் ஆயுதக் கப்பல் ஒன்று பிரவேசித்துள்ளதாக ஏற்பட்டுள்ள பதற்றத்தை கிரேக்கத்துருப்புக்கள் சமாளிப்பார்கள் எனவும் அவர் உறுதியளித்தார். (ஒ)

விகடன்மீது கண்டனம்

சென்னை, மார்ச் 29

'ஆனந்தவிகடன்'வார இதழ்மீது தமிழ்நாடு சபாநாயகர் பி எச் பாண்டியன் நேற்று கண்டனம் தெரிவித்தார்

'ஆனந்தவிகடன், அட்டையில் வெளியான கேலிச் சித்திரம் குறித்து இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டது

அமைச்சர்கள் எம். எல். ஏக்களை அவமதிப்பதாக இக்கேலிச் சித்திரம் இருப்பதாக இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ ஒருவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையில் சபாநாயகர் தீர்மானித்தார் (ஒ-எ)

பாக் பிரமதர் விஜயம்

இஸ்லாமாபாத்மார்ச்29

பாகிஸ்தான் பிரதமர் ஏப்ரல்மாதம் 5ஆம்திகதி லண்டன் விஜயம் மேற்கொள்வார். (ஒ)

தமிழருக்கு ஒரு தனிநாடு தானாகவே கிடைத்திருக்கும்

நேருஜிதான் தமிழரை தவறாக வழி நடத்தியவர்

'இந்து'வில் இப்படி ஒரு கடிதம்

புதுடில்லி, மார்ச் 29

பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய சமயத்தில் தானாகவே தமிழருக்கு தனி நாடு கிடைத்திருக்கும். நேருஜிதான் தமிழரைத் தவறாக வழி நடத்தியதால் அது கிடைக்காமல் பின்னர் நிபெத்தியர்களையும் நேருஜி அதே போன்று தவறாக வழி நடத்திவிட்டார்

'இந்து' நாளிதழில் புதுடில்லியைச் சேர்ந்த இந்தி வாசகர் திரு. பால்ராஜ் மாதொக் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

ஆசிரியர் கடிதப்பகுதியில் திரு. மாதொக்கின் கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது

"இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு" என்ற தலைப்பிலான அக் கடிதம் வருமாறு;

நமிபியா, பலஸ்தீன மக்களின் போராட்டங்களிலும் பார்க்க இலங்கைத்தமிழரின் போராட்டம் முக்கியமானது.

மூன்று நாடுகளில் வாழும் மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை, மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன

ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. இலங்கையில் துன்பம் அடைபவர்களில் பெரும்பாலானோர் இந்துக்கள் நமீபியாவில் கிறிஸ்தவர்கள், பலஸ்தீனத்தில் இஸ்லாமியர்கள்.

இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். ஆகவே நமக்கு அவர்களின் போராட்டத்துக்கு இந்தியா முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் கோருவதில் நியாயம் உள்ளது.

ஆனால் பதவிக்கு வந்த இந்திய அரசுகள், இலங்கைத் தமிழர் விஷயத்தில் கடைப்பிடித்து வந்த கொள்கைகள் தேர விரோதமானவை; பகுத்தறிவுக்கு ஏற்றவை அல்ல.

நமிபியா, பலஸ்தீன மக்களுக்காகத் தென் ஆபிரிக்கா, இஸ்ரவேல் நாடுகளுக்கு எதிராக வீராவேசம் கொண்டு போராடும் இந்தியா, இலங்கை தமிழரை மட்டும் மீண்டும் மீண்டும் கைவிட்டு வருகின்றது. இந்திய அரசு குறித்து தமிழர் வேதனைப்படுவது சரியானதே.

தமிழரின் தற்போதைய கோரிக்கை தமிழ் ஈழம் இலங்கையில் சமஷ்டி அரசமைப்பில் சுயாட்சி நிலவுந்த தமிழர் மாநிலம் ஒன்றுக்கு அவர்களை இணங்கச் செய்யலாம்.

சிங்கள அரசினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது இதன் காரணமாக அப்பாவித் தமிழர் பாதுகாப்புப் படையினராக கொல்லப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழரை நடத்துவதுபோல் தான் பங்களாதேஷில் போராடும் சக்மா மக்களையும் இந்தியா நடத்துகின்றது.

நமிபிய சுதந்திரம், பலஸ்தீன விடுதலை ஆகியவற்றிலும் பார்க்க தமிழர், சக்மா மக்களின் போராட்டங்களில் கூடுதல் நீதி, நியாயம்கண்டு.

சக்மா புத்த மக்களுக்காக இந்திய அரசு கண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. இலங்கைத் தமிழர் விஷயத்தில் மேல்பூச்சு பூசுவதிற்காக இந்தியாவுடுபட்டுள்ளது

தர்மம் முதலில் வீட்டில் தொடங்கவேண்டும் என்ற அடிப்படைகூட இந்தியாவுக்குத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் நிர்ப்பந்தம் காரணமாக இப்போதுதான் இலங்கைத் தமிழர் விஷயத்தில் கவனக்க வேண்டிய அவசியம் இந்தியவுக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகளை இந்திய அரசு அவசரமாக எடுக்கவேண்டும்.

இலங்கை தமிழர்களை இராணுவ நடவடிக்கை மூலம் கொன்றழிக்கும் இராணுவரீதியில் தலையிடவேண்டும். அதன் மூலம் இலங்கைத் தமிழரின் உயிர், வித உரிமைகளை இந்தியா காப்பாற்றும்—இப்படி இலங்கைக்கு இந்தியாசொல்ல வேண்டும்.

இரண்டு: இலங்கைத் தமிழருக்கு சமஷ்டி அரசமைப்பு மூலம் தீர்வு காண இந்தியா செயல்படவேண்டும். பின்னர் சமஷ்டி இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இந்தியா வைத்திருக்கவேண்டும்.

இந்தியாவும் இலங்கையும் ஒரு சம்மேளன அமைப்பின்கீழ் இணைக்க வேண்டும். இதுதான் சிறந்த குறிக்கோள். அப்படிச் செயல்பட்டால் இலங்கை தனது உள்நாட்டுச் சுதந்திரத்தைப் பேணிக்கொண்டு இந்தியாவுடன் கூட்டுப் பாதுகாப்பு, பொருளாதாரம் முதலிய நன்மைகளைப் பெறலாம்.

இப்படி பாலராஜ் மதொக் தனது கடிதத்தில் தெரிவித்து இருக்கிறார். (இ-எ)

வவுனியா முகாமில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்30

கடந்த ஜனவரியில் ஆனையிறவு தடை முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்ட இளைய தம்பி குணரத்தினம் என்ற இளைஞர் வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

மட்டக்களப்புக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது இவர் கைது செய்யப்பட்டார். என்று மட்டக்களப்பில் வசிக்கும் அவரின் சகோதரி செய்து கொண்ட முறைப்பாட்டை, மட்டக்களப்பு பிரசைகள் குழு, இணைப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது.

அவரை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி இணைப்புக்குழு கோரப்பட்டுள்ளது. (உ-ஈ)

பொய்யாமொழி

குறள்:

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்.

பொருள்:

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அறிவும் பகைகொண்டு எதிர்ப்பவர்களும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

வெளிநாடுகள் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் இதனாலேயே நிலை மோசம் என்கிறார் பொலீஸ் மாஅதிபர்

கொழும்பு, மார்ச் 30

வெளிநாடுகள் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி வருவதால் வடபகுதி நிலைமை மோசமடைந்து வருகிறது.

இது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானது மட்டுமல்ல, பெரும் பாதகமானதுமாகும் என்று பொலீஸ் மாஅதிபர் தெரிவித்திருக்கிறார்.

உயிர், உடமைகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை பொலீஸார் தாமதமின்றி எடுக்க வேண்டும்

கலவரம் பற்றிய முதல் அறிவிறுறி தெரிவிக்கப்பட்டவுடன் பொலீஸார் கடமையில் இறங்க வேண்டும் என்றும் பொலீஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

அக்குபஞ்சர் நிலையம்

மானிப்பாய், மார்ச்30

யாழ்ப்பாணத்தில் அக்குபஞ்சர் வைத்திய நிலையம் ஒன்றும் பயிற்சிச்சாலையும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட இருப்பதாக அக்குபஞ்சர் வைத்திய நிபுணர் டாக்டர் சந்தரராசா தெரிவித்துள்ளார்.

அக்குபஞ்சர் டிப்ளோமா பாடத்திட்டமும் பயிற்சி வகுப்புக்களும் அன்று ஆரம்பிக்கப்படும்.

நாடிபட்ட, கைவிடப்பட்ட நோயாளிகளுக்கு இங்கு குணமடைந்த வட்டமாதுடன் இச்சிகிச்சை அளிக்கப்படும்.

—இவ்வாறு டாக்டர் சந்தரராசா கூறினார்.

பற்றுக்குறையைச் சமாளிப்பதற்காக

பயிற்சி பெறுதவர்களை ஆசிரியராக நியமிப்பதா?

வேராசிரியர் விசனம்

பலாலி, மார்ச் 30

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர்கள் பற்றுக்குறை எமது கல்வி நிலையில் மோசமான தாக்கத்தை உண்டுபண்ணும்.

இப்பற்றுக்குறையினை தற்காலிகமாகச் சமாளிக்க வசதிச் சேவைகள் கட்டணத்தில் அல்லது வேறுவகையில் தொண்டர் ஆசிரியர்களை எல்லிற எடுப்பிப்பதால் பயிற்சியும் இன்றி—பாடசாலைகளில் கல்வி போதிக்கும் பணியில் ஈடுபடுத்துவது கல்வித் தரத்துக்கே முரணான செயலாகும்.

—இவ்வாறு யாழ் பல்கலைக் கழக கல்வித் துறைப் பேராசிரியர் ப. சந்திரசேகரம் நெல்லியடியில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்—

எமது அரசாங்கம் இலவசக்கல்வி வழங்குவதாகவும் கல்வி வாய்ப்புக்கள் சகலருக்கும் வழங்கப்படுவதாகவும் கல்விச் செலவீடுகளுக்கு அதிக தொகை செலுத்துவதாகவும் கூறிக்கொள்கிறது.

ஆசிரியர்களைத் தேவையான அளவில் நியமிக்காது இலவசக் கல்வி என்ற எண்ணக் கருவை எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்யாமல் விடுவதாலும் காலம் தாழ்த்தி தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவதாலும் என்னபலன் கிடைத்து விடப் போகின்றது.

சிங்களப் பகுதிகளில் ஆசிரியர் பற்றுக்குறை குறைவாக இருக்கும் போது புதிதாக வெளியிடும் வேண்டிய நேரம் செய்யப்படுகின்றது.

இதனை வகுப்புவாதச் சிந்தனையில் வெளிகாட்டலாகக் கொள்ள வேண்டியுள்ளது

இவற்றுக்கு எதிர்நீச்சல் போடும் தன்மையில் தமிழ்ப் பகுதிகளில் ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்க ஏதாவது நடவடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROYAL INSTITUTE
மானிப்பாய்.
A/L 1988 – 1989 விஞ்ஞானம்
விலங்கியல் - Mr நாகநாதன்
தாவரவியல் - Mr. குணசீலன்
பௌதீகம் - Mr. சத்தியசீலன்
இரசாயனம், தூய பிரயோக கணிதம் (1157) - Mr தயாபரன்

ஈழநாடு

30 - 03 - 1987 திங்கள்கிழமை

மானிப்பாயில் அதிசிறந்த கல்விக்கு
றோயல் இன்ஸ்ரிரியூட்
மானிப்பாய் - மானிப்பாய் - மூன்று
O/L DAY CLASSES
இரண்டாவது புதிய பிரிவுக்கு
ஆரம்பம்:- 30 - 3 - 87
விஞ்ஞானம் - R. செல்வவடிவேல்
கணிதம் - P. ஜெயக்குமார்
சமூகக்கல்வி
வர்த்தகம் - KS. முத்துலிங்கம்
ஆங்கிலம் - Mr. தெய்வதவராஜன்
தமிழ் - பண்டிதர் (1157)

திருமலையில் 30 ஆயிரம் அகதிகளுக்கு நிவாரணம் கிடையாது

கிழக்கில் மீளக்குடியேற மறுக்கும் தமிழரின் காணிகள் பறிபோகும்

தமிழர் தாயகத்தை சிங்களமயப்படுத்த அரசு புதிய யுக்தி!

யாழ்ப்பாணம், மார்ச் 30 வன்செயல் காரணமாக திருமலையில் இருந்து அகதிகளாக வெளியேறிய தமிழர் அப்பகுதிகளில் மீளக் குடியேறாத பட்சத்தில் அவர்களது காணிகளில் சிங்களவர்களை குடியேற்ற அரசு முயற்சிக்கும்.

இந்த அகதிகளுக்கு யாழ்ப்பாணத்திலும், இளைஞர்களிலும் குடியேற காணிகளை வழங்கவும் அரசு தயாராகவுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற அரச அதிபர்களின் மாநாட்டின் போது இந்தத் தகவல் உயர் அதிகாரிகள் வெளியிட்டனராம்.

இந்தமைய நடவடிக்கைகளின் மூலம் கிழக்கை சிங்களமயமாக்க அரசு முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த யுக்தியை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக திருமலை அகதிகளின் நிவாரண உதவிகளை மறுத்து அவர்களை மீளக் குடியேறுமாறு அரசு வற்புறுத்துகின்றது.

வழங்கப்படும் காலக் கெடுவுக்குள் இவர்கள் மீளக் குடியேறாத பட்சத்தில் இவர்களது காணிகளில் சிங்களவரைக் குடியேற்ற அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிகிறது.

இதேவேளை திருமலையிலிருந்து அகதிகளான 37 ஆயிரம் பேரில் 7 ஆயிரம் பேருக்கே நிவாரண உதவிகளை அரசு வழங்கும் என்ற தகவலும் வெளியாகியிருக்கிறது.

30 ஆயிரம் அகதிகளுக்கு இந்த மாதத்திலிருந்து நிவாரணம் வழங்க முடியாது என புனர்வாழ்வு அமைச்சு கையை விரித்துள்ளது.

திருமலையில் உள்ள 61 கிராமங்களிலிருந்து வன்செயல்களால் இடம் பெயர்ந்து அகதிகளாகினோரில் 8 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நிவாரண உதவி வழங்க அரசு முன்வந்துள்ளது.

ஏனையோருக்கு உதவி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில் நேற்று நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன. (உ-ன)

யுத்தக் கைதிகள் விடயம்!

பிரசைகள் குழுக்களுடன் அரச அதிகாரிகள் இன்னும் தொடர்பு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச்30

புலிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 8 யுத்தக் கைதிகளையும் விடுவிப்பதற்காக அரசின் உயர் அதிகாரிகள் எவரும் பிரசைகள் குழுக்களுடன் இன்னும் தொடர்பு கொள்ளவில்லை.

இவ்வாறு பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுத் தலைவர் எஸ். அருளமநாயகம் கூறினார்.

கைதிகளை விடுவிப்பதற்காக அரச உயர் அதிகாரிகள் செல்வாக்குமிக்க பிரசைகள் பிரிவினருடன் தொடர்பு கொண்டுள்ளதாக 'ஆங்கில' நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக எமது செய்தியாளர் அவரை வினவியபோதே அவர் முன்கண்டவாறு கூறினார். (உ-ன)

பயிற்சி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டிக்கை எடுத்தாக வேண்டிய கட்டாயமுண்டு.

* ஒய்வு பெற்றும் கற்பித்தலுக்குத் தேவையான கூடம், உள நல முன்னோர் தமது சேவையினை ஆற்றுதல்—

* வசதிகள் கேவைகள் கட்டணத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தகுந்த நிரவணங்களில் உதவியுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளோ, பக்கங்கள் எழுங்களோ பயிற்சி அளிக்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்தல்.

* பாடநூல்கள் வெளிவரும் வரை பதிப்பகங்கள் நிரவணங்கள்- நலன்புரித் தரவனங்கள் தகுதியான உபநூல்களை வெளியிடுதல்.

இதுபோன்ற ஆக்கப் பணிகள் இப்போது அவசியம் தேவை. (உ-119)

நல்லூர் தாக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டுத் தளபாடங்களும் முற்றாக சேதமடைந்தன.

கே. கனகரத்தினம் என்பவரது வீட்டு கூரையும் பன்னக் கண்ணாடிகளும் முற்றாக நாசமாகின.

இந்த வீடு 1985 ஆம் ஆண்டிலும் இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்கானது என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கரலிங்கர் என்பவரது வீட்டின் சமையலறை சேதமுற்றுள்ளது.

செட்டித்தெரு ஒழுங்கையில் உ. சிவராஜா என்பவரது வீட்டு சமையலறை, வீட்டுக் கூரை என்பன முற்றாகப் பாதிப்படைந்தன.

இதற்கருகில் இருந்த இவரது தாயாரின் வீடும் பலத்த சேதத்திற்குள்ளானது.

செட்டி ஒழுங்கையில் ஆர். சுந்தரமூர்த்தி என்பவரது வீட்டுக் கூரை, நலசல கூடம், சுற்றுமதில் என்பன முற்றாகச் சரிந்துள்ளன.

கே. சிவசம்பு என்பவரது வீட்டுக் கூரையும் சகல பன்னக் கண்ணாடிகளும் நொறுங்கின. இவரது வீட்டில் நிற்கும் மோட்டார் வாகனமொன்றும் பலத்த சேதமடைந்தது.

நல்லூர் குறுக்குத் தெருவில் உள்ள சிறிய வைரவ கோவில் ஒன்றும் முற்றாக சேதமடைந்தது. (உ-10-7)

விற்பனை நிலைய திறப்பு விழா

கல்முனை, மார்ச் 30

கல்முனைப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய விற்பனை நிலையமான ஏழாம், கோட்டைக்காடு விற்பனை நிலையத்தை இன்று திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு நிலையத் தலைவர் திரு. சி. குமரவேல் திறந்துவைப்பார். (உ-17)

கோட்டையிலிருந்து திடீரென நேற்று ஷெல் தாக்குதல்

மூவர் காயம்; வீடு சேதம்

யாழ்ப்பாணம், மார்ச்30

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று மாலை சுமார் 6-05 மணியளவில் திடீரென ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சின்னக்கடைப் பக்கமாக நடத்தப்பட்ட இந்த ஷெல் தாக்குதல் காரணமாக ஒரு வீட்டிலிருந்த கணவன் மனைவி மகன் ஆகியோர் காயமடைந்தனர்.

அவர்களது வீடும் பலத்த சேதமடைந்துள்ளது.

திடீரென வந்த விழுந்த ஷெல் குண்டுகள் 4 ஆம் குறுக்குத் தெருவிலும் அதை அண்டிய கடற்கரைப் பக்கத்திலும் விழுந்து வெடித்தன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

பிரான்சிஸ் ஜெகநேசன் (47 வயது) அவர் மனைவி மரியாம்பிள்ளை (38 வயது), ஜெகநேசன் டேமியன் ராஜேந்திரன் (5 வயது). (உ-10)

டிச. 19 யோசனையை பரிசீலிக்க புலிகள், ஈரோஸ் இருநிபந்தனை

சென்னை, மார்ச் 30

இலங்கை அரசு எரிபொருள் தடையை நீக்கி, இராணுவ நடவடிக்கையை நிறுத்தினால் மட்டுமே டிசம்பர் 19 யோசனையை பரிசீலிக்க எடுத்துக்கொள்வோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ் ஆகியன இந்திய அரசுக்கு அறிவித்து விட்டன.

சென்னையில் இன்று அமைச்சர்கள் ப. சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோரிடம் இது முறைப்படி தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் 19 யோசனையை இந்திய அரசு முற்றாக நடைமுறையாக உதவியோக பூர்வமாக தமிழர் அமைப்புகளிடம் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் வைத்துக் கையளித்தது.

அப்போதே போராளிக் குழுக்கள் முன்கண்ட நிலைப்பாட்டை இந்திய அமைச்சர்களிடம் தெரிவித்தன

இதேவேளை டிசம்பர் 19 யோசனைகளை பேச்சுக்களுக்கான அடிப்படை என்பதை போராளிக் குழுக்கள் ஏற்கவில்லை.

நிராகரிக்காத பட்சத்தில் விரிவான பேச்சுக்களை சென்னையில் நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இந்திய அரசு அழைக்கும் – இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' வில் எழுதியுள்ளார்.

ஏனைய போராளிக் குழுக்கள் தலைமை என்னை விதத்தில் இந்த அழைப்பை திரு. பிரபாகரனுக்கு இந்திய அனுப்பும் என்றும் திரு. ரெட்டி எழுதியுள்ளார்.

இதனிடையே பேச்சுக்களை நடத்துவதற்கு முதல் எரிபொருள் தடை நீக்கம், இராணுவ நடவடிக்கை நிறுத்தம் முதலியன இடம்பெற வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்திய அமைச்சர்களிடம் வலியுறுத்தியது

விசாரணை

வெளிநாடுகளில் அகதிகளாகத் தங்கியிருந்து விட்டு நாடு திரும்புவோர் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

அதன் பின்னரே சொந்த இடங்களுக்குச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

சொந்த இடங்களுக்கு செல்ல முடியாதோர் அரசினால் நிர்வகிக்கப்படும் அகதி முகாம்களில் தங்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு அரச அதிபர்களுக்கு அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (உ-ன)

வடக்கு, கிழக்கிற்கு அழைத்தால் வருவேன்

ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

வடக்கு, கிழக்கிற்கு என்னை வருமாறு அழைத்தால் அப்பகுதிகளுக்கு விஜயம் செய்வேன்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இப்படித் தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

"வொவ்புர 87" கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருக்கிறது

இலங்கையைப் போன்று வேறு பல நாடுகளிலும் பயங்கரவாதம் காணப்படுகிறது இலங்கையில் நிலவும் பயங்கரவாதம் சர்வதேசத் தொடர்புடையது.

இந்த நாட்டில் வாழும் எவரும் பயங்கரவாதத்துக்குப் பணிந்து தலை குனிந்து விடமாட்டார்கள். தலைகுனியவும் கூடாது– இப்படி அவர் மேலும் தெரிவித்தார்

ஆஸ்பத்திரி. . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

உடனடியாக மாற்றப்பட்டிருக்கின்றனர். அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

ஷெல்லுக்கு மத்தியிலும் டாக்டர்கள், தாதிமார், ஆஸ்பத்திரி ஊழியர்கள் சுறுசுறுப்பாக இயங்கி படுகாயமடைந்தோரைக் காப்பாற்றும் முதலுதவி சிகிச்சைகளில் ஈடுபட்டிருந்தனர்.

சேதமடைந்த வார்ட்டுகளில் உயிரிழந்த நோயாளிகள் சடலங்கள் அப்படியே கிடந்தன. (உ)

3 இந்திய மீனவரும் தெய்வாதீனமாகத் தப்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பருத்தித்துறைப் கரை ஒதுங்கிய மூன்று இந்திய மீனவர்களும் சனிக்கிழமை யாழ் நகரின் மீது நடத்தப்பட்ட மும்முனைத் தாக்குதலில் போது தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இம்மூவரும் தங்கியிருந்த குருநகர் வீட்டுக்கு அருகில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

எனினும் அவர்கள் காயம் எதுவுமின்றி தப்பினர்.

இதுமட்டுமல்ல தமிழக மீனவர்கள் இந்திய தூதரகச் சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியத்திடம் முறையிட்டுள்ளனர். அவர் இந்தியத் தூதரகத்துக்கு இதுபற்றி உடன் அறிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள காசி புரம்கடற்கரையிலிருந்து தொழிலுக்காக தமது இயந்திரப்படகில் இம்மூன்று மீனவர்களும் புறப்பட்டனர்.

இவர்களது படகில் இயந்திரம் பாதிவழியில் பழுதடைந்தது.

இதனால் இவர்கள் இம்மாதம் 15ஆம் திகதி பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கினர்.

கபிரியேல் செல்வராஜா, கபிரியேல் யோசப், ஆறுமுகம் முருகன் ஆகியோரே மேற்படி மீனவர்களாவர்.

இவர்களது படகு பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.

இவர்களைப் பொறுப்பேற்ற வல்வை பிரசைகள் குழு யாழ் அரச அதிபரிடம் அவர்களை ஒப்படைத்தது.

இவர்களை பாதுகாப்பாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது குறித்து அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சகமும், இந்தியத் தூதரக சட்டத்தரணியுடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

இந்த மீனவர்கள் தற்போது குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். (உ-ன)

ஷெல் விழுந்த இடங்கள்

இன்று அதிகாலை கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் நகரின் பல இடங்களிலும் விழுந்து வெடித்து நகரை அதிரச் செய்தன.

வேம்படி மாவிர் கல்லூரி மைதானத்தில் விழுந்து வெடித்த ஷெல் வீசுன் பாரிய குழி ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

யாழ் இந்துக் கல்லூரி இரசாயன கூடத்தில் விழுந்த ஷெல்லினால் இரசாயன கூடம் சேதமடைந்தது.

ஒஸ்டுமட வீதி, ஆஸ்பத்திரிக்கு முன்பக்கத்தில் ஆஸ்பத்திரி வீதி ஆகிய வற்றிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

நல்லூர், நீர்வேலி...-

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வினால் மூன்று பெரிய வீடுகள் முற்றாக இடிந்து நொறுங்கின. வீடுகளில் இருந்த பொருட்கள் எரிந்து நாசமாகின.

மண்வீடு ஒன்று இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமானது.

இருபதுக்கும் அதிகமான வீடுகளில் கூரைகள், ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கியுள்ளன.

குண்டு வீச்சுக்குள்ளான பகுதிகளில் உள்ள மரங்கள் துண்டம் துண்டமாக முறிந்து சிதறிக் காணப்பட்டன

குண்டு விழுந்த இடங்களில் பல அடி ஆழத்துக்கு பெருங் குழிகள் காணப்படுகின்றன

கமார் அரையணி நேரமாக தொடர்ந்து நடைபெற்ற இக் கொடூரத் தாக்குதலில் இரண்டு தேர் காயமடைந்தனர்.

இப் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளுக்குள் மக்கள் ஒதுங்கிக்கொண்டதன் காரணமாக அதிக உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

வைரவர் ஆலயம் ஒன்று குண்டு வீச்சு அதிர்ச்சியினால் இடிந்து சேதமடைந்தது.

இப் பகுதியில் மேலும் விமானத் தாக்குதல்கள் தொடரலாம் என்ற அச்சம் காரணமாக இப் பகுதி மக்கள் அங்கிருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நீர்வேலியில்

நல்லூரில் ஆகோரத் தாண்டவத்தை முடித்துக்கொண்ட நான்கு பொம்மர்களும் காலை 9.50 மணியளவில் நீர்வேலி வடக்குப் பகுதியில் பொதுமக்கள் வதியும் இடங்கள் மீது தமது மூர்க்கத்தனமான வெறியாட்டத்தை வெளிக்காட்டின.

இருபதிற்கும் அதிகமான குண்டுகள் அப்பகுதியில் வீசப்பட்டன.

அங்கு நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் இ. அன்னலட்சுமி (32 வயது), எஸ். பொன்னையா (60 வயது) ஆகிய இரு அப்பாவிகளும் கொல்லப்பட்டனர்.

இருவர் பலத்த காயமடைந்தனர்.

பத்துக்கும் அதிகமான வீடுகளும் பாலர் பாடசாலை ஒன்றும் தொழிற்சாலை ஒன்றும் பலத்த சேதமடைந்தன.

அப்பகுதியில் மிக்சார வயர்களும் அறுந்து வீழ்ந்துள்ளன (உ-7-1



நீர்வேலிப்பகுதியில் அரச படையினர் நடத்திய மூர்க்கத்தனமான பொம்மர் தாக்குதலில் உயிரிழந்த இரு அப்பாவிப் பொதுமக்கள் (உ)
(படம்:- ஜெயம்)

நல்லூர் தாக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த விமானத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்களை யாழ் அரச அதிபரும் உயரதிகாரிகளும் சென்று பார்வையிட்டனர்.

அரச அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம் மார்ச் 30

இன்று திங்கள் காலை யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்களை யாழ் அரச அதிபரும் உயரதிகாரிகளும் சென்று பார்வையிட்டனர்.

யாழ் மாநகரசபை நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபா வழங்கல்

யாழ் மாநகரசபை ஊழியர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபா பணத்தை ஆணையாளர் திரு. வி. வி. சே. வெஞ்ஞானம் வழங்கினார்.

படுகாயம்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

(50வயது) கல்வியங்காடு

5. பெருமாள் கிருஷ்ணசாமி (வயது 58) சமாதானபுரம், அக்கராயன்.

6 வேலு, (58 வயது) இளைஞர்சி

7. தம்பிஐயா நல்லையா (51 வயது) பன்.

8 எஸ் சுப்பிரமணியம் (53 வயது) யாழ்ப்பாணம்.

8. மார்க்கண்டு இரத்தினசிங்கம் (80 வயது) ஆனைக்கோட்டை.

10. மாணிக்கம் வீரகத்தி (வயது 46) ஆஸ்பத்திரி ஊழியர் நோயாளியாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

11. சடையார் சின்னண்டி (வயது 45)

18. ஆர். சிங்கராஜா (32 வயது) வவுனியா.

13. பொன்னம்பலம் கப்பையா (64 வயது) பரந்தன்.

இன்னும் எட்டுப் பேர் காயமடைந்தனர். அவர்கள் விவரம் தெரியவில்லை. (உ-10)

வடக்கின் மிகப் பிரமாண்டமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
ஈழநாடு -நிறுவனத்தின் ஆதரவோடு
1987
யாழ் ஜோ விஸ்ராஸ் னியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரமாண்டமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் _____
கல்லூரி _____
வாக்காளர் பெயர் _____
விலாசம் _____
ஒப்பம் _____

ஐவர் குடும்பங்களுக்கு தலா ரூ. 1000 உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 30

சனிக்கிழமை யாழ் நகர் மீது இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் பாதிப்படைந்த ஐவர் குடும்பங்களுக்கு யாழ் மாநகரசபையினர் தலா ஆயிரம் ரூபாவீதம் வழங்கினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மிக்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் பதிப்பகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 30 - 03 - 1987 தொலைபேசி இல. 24805, 22072

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at th General Post Office. Under Number 91 / 94 /N /87. Telephone 24805, 22072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org